திராவிட மாடல் ஆட்சியில் அதிக உள்நாட்டு உற்பத்தி - உயர்கல்வியில் முன்னணி மாநிலமாக திகழ்கிறது!

# தமிழ்நாட்டில் குவியும் தொழில் முதலீடுகள்!

## உலகப் புகழ்பெற்ற 'புளூம்பர்க்' இணைய இதழ் புகழாரம்

**சென்னை, அக்.5-**

**திராவிட மாடல் ஆட்சியில் அதிக உள்நாட்டு உற்பத்தி; உயர் கல்வியில் முன்னணி மாநிலமாக தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகள் குவிந்து வருவதாக Bloomberg இணைய இதழ் புகழாரம் சூட்டியுள்ளது.**

உலகப் புகழ்பெற்ற Bloomberg நிறுவன இணைய இதழில் தமிழ்நாட்டின் திராவிட மாடல் வளர்ச்சி குறித்து; 'வணிகம் செய்வதில் தமிழ்நாடு முன்மாதிரி' என்ற தலைப்பில் கட்டுரை வெளியிட்டுள்ளது. மேனகா தோஷி அந்தக் கட்டுரையை எழுதியுள்ளார். அதன் முக்கியப் பகுதி வருமாறு:

தமிழ்நாட்டில் நடப்பு ஆண்டில் ரூபாய் 100 கோடி அதாவது ஒரு டிரில்லியன் ரூபாய் (சுமார் 12 பில்லியன் டாலர்) அளவிற்கு நிகர வருவாய் வருவதால், தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகள் குவிந்து வருகின்றன.

மிகப்பெரிய கார்கள் மற்றும் மின்னணு பொருட்கள் ஏற்றுமதி செய்யும் - இந்தியாவின் மிகவும் தொழில்மயமான தமிழ்நாடு தற்போது குஜராத் மற்றும் மகாராஷ்டிராவுடன் மட்டுமல்ல, வியட்நாம் மற்றும் மெக்சிகோவுடனும் போட்டியிடுகிறது.

'ஆப்பிள்' நிறுவன உற்பத்திக்கான வசதிகளுடன் விரைவில் கூகுள் நிறுவன உற்பத்தி வசதிகளை ஏற்படுத்த உள்ள இந்தத் தென் மாநிலம் அண்மையில் கார்னிங் மற்றும் ஜபில் ஆகியவற்றிலிருந்து 350 மில்லியன் டாலர் மதிப்பிலான திட்டங்களைப் பெற்றுள்ளது.

ஜனவரியில், வியட்நாமில் உள்ள வின்ஃபாஸ்ட் நிறுவனம் மின்சார வாகனங்களை உருவாக்க 500 மில்லியன் டாலர் அளவிற்கு முதல் கட்டமாக முதலீடு செய்ய உறுதியளித்தது.

டாட்டா மோட்டார் நிறுவனம் 10 லட்சம் டாலர் முதலீட்டில் லேண்ட் ரோவர் கார்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை, உலகின் ஆட்டோ மையமாகத் திகழும் இம்மாநிலத்தில் நிறுவத் திட்டமிட்டுள்ளது.

இங்கிருந்து 3 ஆண்டுகளுக்கு முன் வெளியேறிய 'ஃபோர்டு' நிறுவனம் தற்போது மீண்டும் தமிழ்நாட்டில் சென்னைக்கு அருகில், தொழிற்சாலையைத் தொடங்கி, கார்களை உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்ய இருப்பது ஓர் இனிப்பான வெற்றியாகும்.

சீனாவின் 'பிளஸ்-ஒன்' போக்குதான் இந்தியாவிற்கு குறிப்பாக தமிழ்நாட்டிற்கு முதலீடுகளைச் செய்யத் தூண்டப்படுவதாக தமிழ்நாடு தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.

சில ஜப்பானிய முதலீட்டாளர்கள் உற்பத்தியை ஆய்வு செய்வதற்காக சென்னைக்கு தங்கள் நிறுவன குழுக்களை அனுப்புவதாக அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா மேலும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ராஜா (வயது 48) தமது இளம் வயது அதிகாரிகளான தொழிற்துறை செயலாளர், முதலீட்டு நிறுவனத் தலைவர்கள் (40 முதல் 50 வயது வரை உள்ளவர்கள்) சற்று வித்தியாசமாக செயல்படுகிறார்கள்.

சுற்றுச் சூழலில் முக்கிய பங்குதாரர்களை குறிவைக்க உலகளாவிய விநியோக இணைப்புகளை அவர்கள் தீவிரமாக ஆய்வு செய்கின்றனர். முதலீட்டாளர்களை உள்ளூர் விநியோகஸ்தர்களிடம் தொடர்பு கொள்ள வைக்கிறார்கள்.

துறைமுகச் செயல்திறனை அவர்கள் மேம்படுத்துகின்றனர். தமிழ்நாடு தொழில் தொடங்குவதற்காக வெளி நாட்டின் முதலீட்டாளர்களை தற்போதுள்ள முதலீட்டாளர் களுடன் இணைக்கும் முயற்சியில் அவர்கள் செயல்படுகிறார்கள்.

அமெரிக்காவில் சான்பிரான்சிஸ்கோவில் கடந்த ஆகஸ்ட் மாதம் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், 'ஃபர்ஸ்ட் சோலார்' நிறுவன

Bloomberg

தலைமை அதிகாரி, தமிழ்நாட்டில் தனது நிறுவன அனுபவத்தை பகிர்ந்து கொண்டதோடு, சிறந்த 'பிராண்டு அம்பாசிடர்' போலவே பணியாற்றினார்.

குஜராத் மாநிலம் இரண்டு பெரிய 'செமி கண்டக்டர்' திட்டங்களை பெற்ற உடன், தமிழ்நாடும் 'செமி கண்டக்டர்' திட்டத்தில் முதலீடுகள் வெறுவதில் தீவிரமாக உள்ளது.

"ஆய்வும், வளர்ச்சியும் எங்களது பலம். இந்தியாவில் திறமை வாய்ந்தவர்களில் அதிகம் தமிழ்நாட்டில்தான் உள்ளனர். அதிகப்படியான 'பேட்டண்டு' (காப்பீடு) கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனவே நாங்கள் அறிவுப் பொருளாதாரத்தில் செயல்படுகிறோம்" என்றும் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா குறிப்பிட்டார்.

வாஷிங்டனை மையமாகக் கொண்ட சர்வதேச ஆய்வுகளுக்கான மையத்தின் மூத்த ஆலோசகர் ரிச்சர்ட் ரோசோவ் குறிப்பிடுகையில், 'இந்தியாவில் முதலீடு செய்வது என்பது கார் வாங்குவது போன்றது. அவரது கூற்றுப்படி ஒன்றிய அரசின் கொள்கைகள் வெளிப்புறங்களை குறிக்கின்றன. ஆனால் மாநிலங்கள் உள்கட்டமைப்பு மற்றும் தரத்தை நிர்ணயிக்கின்றன' என்றார்.

'மண்டல அளவில் உற்பத்தி செய்யும் முதலீட்டாளர்கள் பலமுறை தமிழ்நாட்டைத்தான் கூர்ந்து நோக்குகிறார்கள். மாநிலத்தின் அணுகுமுறையும் மிகமிக முக்கியமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமூகப் பொருளாதார வளர்ச்சியுடனான திராவிட மாடல் ஆட்சியில் இந்தியாவிலேயே அதிக உள்நாட்டு உற்பத்தி கொண்ட மாநிலமாகவும், உயர் கல்வியிலும் முன்னணியில் உள்ள மாநிலமாகவும், நாட்டிலேயே தொழிற்சாலைகளில் அதிகமாக பணியாற்றும் (40 சதவிகிதம்) பெண்கள் மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்கிறது.

வர்த்தகத்தைப் பொறுத்த வரை தமிழ்நாட்டில் அதிக அளவிலான சிறிய, நடுத்தர தொழிற்சாலைகள் உள்ளன. வேலை வாய்ப்பும் உள்ளன. ஏற்றுமதிக்கான நிலையும் சிறப்பாக உள்ளது.

தமிழ்நாட்டில் படித்த தொழிலாளர்கள், அதிகமான விநியோகத்திறன், கொள்கை ஊக்குவிப்பு இவைகளால், மகாராஷ்டிரா, ஆந்திரா, ஒடிசா மாநிலங்கள் தமிழ்நாட்டை பின்பற்றுகின்றன.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மண்டலங்களிலும்

## கொசு ஒழிப்பு பணிக்காக கூடுதலாக 100 புகை பரப்பும் இயந்திரங்கள்!

### அமைச்சர் கே.என்.நேரு களப்பணியாளர்களுக்கு வழங்கினார்!

*சென்னை, அக்.5-*

*வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மண்டலங்களிலும் கொசு ஒழிப்புப் பணிக்காக ரூ.67 இலட்சம் மதிப்பில் கூடுதலாக கையினால் இயக்கும் 100 புகைப்பரப்பும் இயந்திரங்களை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, களப்பணியாளர்களுக்கு நேற்று (04.10.2024) ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.*

*பின்னர், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :-*

*வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள மழைநீர் வடிகால்களில், முதற்கட்டமாக 792 கி.மீ. நீளமுள்ள மழைநீர் வடிகால்கள் தூர்வாரும் பணி முடிக்கப்பட்டுள்ளது. 1152 கி.மீ. நீளத்திற்கு நடைபெற்று வரும் தூர்வாரும் பணி 10.10.2024க்குள் முடிக்கப்படும்.*

*பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்படும் 53.42 கி.மீ, நீளமுள்ள 33 நீர்வழிக் கால்வாய்களில் 2 ஆம்பிபியன், 3 மினி ஆம்பிபியன், 6 ரோபொடிக் எஸ்கவேட்டர் இயந்திரங்கள் மூலம் ஆகாயத் தாமரைகள் மற்றும் வண்டல்கள் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*மொத்தமுள்ள 1 இலட்சத்து 9 ஆயிரத்து 395 எண்ணிக்கையிலான வண்டல் மண் சேகரிக்கும் தொட்டிகளில் (Silt catch Pit) தற்பொழுது 73,180 வண்டல் மண் சேகரிக்கும் தொட்டிகளில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணிகள் 10.10.2024க்குள் முடிக்கப்படும்.*

*2021 முதல் 2024 வரை 784.96 கி.மீ. நீளத்திற்கு புதியதாக மழைநீர் வடிகால்கள் கட்டப்பட்டுள்ளது. மேலும், கொசஸ்தலையாறு, கோவளம் வடிநிலப் பகுதிகளில் 350 கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் கட்டப்பட்டு வருகிறது.*

*வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பருவமழை முடியும் வரை அவசரப் பணிகள் தவிர சாலை வெட்டுப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.*

*மேலும், தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை வெளியேற்றிட பல்வேறு திறன் கொண்ட 990 மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன. 162 நிவாரண மையங்கள் தயார்நிலையில் உள்ளன. விழுந்த மரங்கள் மற்றும் மரக்கிளைகளை அகற்ற 280 மரம் அறுக்கும் இயந்திரங்கள் தயார்நிலையில் உள்ளன. சிந்தாதிரிப்பேட்டை மற்றும் கோபாலபுரத்தில் உள்ள பொது சமையற் கூடங்களில் மணிக்கு 1500 நபர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் தயார் செய்யும் வகையில் தயார் நிலையில் உள்ளது.*

*ஒவ்வொரு வார்டுகளிலும் புயல் மற்றும் மழைநீர் அகற்றும் அவசரப் பணிகளுக்கு 5 நபர்கள் தற்காலிகமாக பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். பொதுமக்களிடமிருந்து மழைத் தொடர்பான புகார்களை பெற்று உடனடி நடவடிக்கை எடுக்கும் வகையில், ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் (ICCC-Integrated Command and Control Centre) 24x7 இயங்கி வருகிறது.*

*15 மண்டலங்களுக்கும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் (IAS Officers) கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டு, கடந்த 2 நாட்களாக நடைபெற்று முடிந்த மழைநீர் வடிகால் பணிகள், நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளை கண்காணித்து வருகின்றனர்.*

*பெருநகர சென்னை மாநகராட்சியின் 16 சுரங்கப்பாதைகள் மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் 6 சுரங்கப்பாதைகள் ஆகியவற்றில் தேங்கும் மழை நீரை வெளியேற்ற, மோட்டார் பம்புகள் மற்றும் ஜெனரேட்டர்கள் தயார் நிலையில் உள்ளன. பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 300 சுகாதார மையங்கள் மற்றும் மருத்துவமனைகளில் மழைக் காலத்திற்கு தேவையான மருந்துகள் கையிருப்பில் உள்ளன. மழைக்காலங்களில் கூடுதலாக மருத்துவ முகாம்கள் நடத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*கொசுக்களால் பரவும் நோய்த்தடுப்பு பணிக்காக நிரந்தர மற்றும் தற்காலிகப் பணியாளர்கள் என 3,368 களப்பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். கொசுக்களை கட்டுப்படுத்தும் பணிக்காக 319 மருந்து தெளிப்பான்கள், 54 பவர் ஸ்ப்ரேயர்கள், பேட்டரி மூலம் இயங்கும் 156 ஸ்ப்ரேயர்கள், 324 புகைப்பரப்பும் இயந்திரங்கள், வாகனங்களில் பொருத்தப்பட்ட 64 புகைப்பரப்பும் இயந்திரங்கள் மற்றும் 6 ட்ரோன் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.*

*அதிக மழைநீர் தேங்கும் இடங்கள் கண்டறியப்பட்டு, எதனால் அந்த இடத்தில் மழை நீர் தேங்கியது எனக் கண்டறிந்து, அதற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதிகளில் போதுமான அளவில் மோட்டார் பம்புகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெயசந்திர பானு ரெட்டி, நிலைக்குழுத் தலைவர்கள் டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), க.தனசேகரன் (கணக்கு), பாலவாக்கம் த.விசுவநாதன் (கல்வி), துணை ஆணையாளர்கள் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, எம்.பிருதிவிராஜ், (வருவாய் (ம) நிதி), எம்.பி.அமித், (தெற்கு வட்டாரம்), கே.ஜெ.பிரவீன் குமார், (மத்திய வட்டாரம்), கட்டா ரவி தேஜா, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில்

## திட்டங்களின் செயலாக்கம் குறித்த கூட்டம்!

### அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நடைபெற்றது!

*சென்னை, அக் 5-*

*நேற்று (04.10.2024) தலைமைச் செயலகத்தில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் 2021-2022 முதல் 2024-2025 வரையிலான நிதியாண்டுகளில் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களின் செயலாக்கம் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.*

*நேற்று (04.10.2024) தலைமைச் செயலகத்தில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் 2021-2022 முதல் 2024-2025 வரையிலான நிதியாண்டுகளில் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களின் செயலாக்கம் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம், நகர்ப்புர வேலை வாய்ப்புத் திட்டம், வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்குதல், நகர்ப்புர உள்ளாட்சிகளுக்கு சொந்தமான குளங்களை தூர்வாரி மேம்படுத்துதல், பழைய தேக்க திடக்கழிவுகளை முறையாக அப்புறப்படுத்துதல், திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கான வாகனங்கள், விளையாட்டுத் திடல்களை மேம்படுத்துதல், தெரு விளக்குகள் அமைத்தல், நவீன தகன மேடைகள், சந்தைகள், புதிய பேருந்து நிலையங்கள், பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள், குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகளின் தற்போதைய நிலை மற்றும் மாநகராட்சிகளில் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் / கழிவுநீர் திட்டப் பணிகள், குடிநீர் அபிவிருத்தித் திட்ட பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள் குறித்து அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.*

*மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கான புதிய அலுவலகக் கட்டடங்கள், உயர்மட்டப் பாலங்கள், சாலைகள் மேம்பாடு, மழைநீர் வடிகால்கள், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பாடுகள் குறித்தும் அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார். அறிவிக்கப்பட்ட திட்டப் பணிகள் அனைத்தும், நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடிக்கப்பட்டு பின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் எனவும், அதன் பின்னர், அத்திட்ட பணிகளின் செயலாக்கங்களை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்திட வேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.*

*இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ் குமார், ம் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆலந்தூர் வடக்குப் பகுதிச் செயலாளர் ப.குணாளன் நேற்று கலைஞர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரை நேரில் சென்று நலம் விசாரித்தார். உடன் மண்டல குழு தலைவர் என்.சந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், மாமன்ற உறுப்பினர் மோகன் குமார், அரிகிருஷ்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

ஆர்.எஸ் .பாரதி , சிறப்புரை! ஆர்.டி சேகர் எம்.எல்.ஏ., ! கலாநிதி வீராசாமி எம்.பி., ஏ.சரவணன் பங்கேற்பு!

## பெரம்பூர் தெற்கு பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### க.ஜெயராமன் அறிவிப்பு!

*சென்னை,அக்.5-*

*கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்கு பகுதியில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறுகிறது.*

*இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆலோசனை வழங்குகிறார்.*

*மாவட்டபொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு ஆலோசனை வழங்குகிறார்கள்.*

*இக்கூட்டத்தில் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, தொகுதி பொறுப்பாளர் ஏ.சரவணன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றுகின்றனர்.*

*தலைமை : பகுதி செயலாளர் க.ஜெயராமன் நாள்: இன்று 05.10.2024 சனிக்கிழமை மாலை 5.0 மணி, இடம் : பெருந்தலைவர் காமராஜர் மண்டபம் பழனியாண்டவர் கோயில் தெரு, செ-11*

*மேற்படி பொது உறுப்பினர்கள் கூட்டங்களில்*

*மாநில நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்றஉறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட நிர்வாகிகள், மாவட்ட பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாகம் முகவர்கள் , BLA2, BLC, கழகப் பொது உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் இவ்வாறு பகுதி செயலாளர் க.ஜெயராமன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*

சென்னை கிழக்கு மாவட்ட மாணவரணி பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் மாவட்டக் கழக செயலாளர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில் ஓட்டேரி, எம்.கே.டி.மகாலில் நடைபெற்றது. இதில் கழக மாணவரணி இணை செயலாளர் எஸ்.மோகன் மற்றும் கழக மாணவரணி துணை செயலாளர் மன்னை த.சோழராஜன் ஆகியோர் பங்கேற்று நேர்காணல் நடத்தினர். இதில் பகுதி கழக செயலாளர்கள், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உதயநிதி ஸ்டாலின் அவர்களை துணை முதலமைச்சராக நியமித்ததைத் தொடர்ந்து வில்லிவாக்கம் கிழக்குப் பகுதியில் மாவட்டச் செயலாளர்அமைச்சர் பி.கே.சேகர் பாபு அவர்களின் அறிவுறுத்தலுக் கிணங்க பகுதிச் செயலாளர் வே.வாசு தலைமையில் கழகத்தினர் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கியும் பட்டாசு வெடித்தும் கொண்டாடினர். இதில் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் பங்கேற்றனர்.